# National Diploma In English

## ජාතික ඉංග්‍රීසි ඩිප්ලෝමා පාඨමාලාව

## தேசிய ஆங்கில டிப்ளோமா

# 12

**Psalm Institute of Engineering and Technology**
A Division of Psalms Technologies (Pvt) Ltd,
22-1/4, Galle Road, Dehiwala.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NATIONAL DIPLOMA IN ENGLISH

## தேசிய ஆங்கில டிப்ளோமா பயிற்சிநெறி

ஒவ்வொரு மனிதரும் ஒவ்வொரு விதமாக சிந்திக்கின்றார்கள்.

ஆம். நான் சிந்திப்பது போல் நீங்கள் சிந்திப்பது இல்லை. நீங்கள் சிந்திப்பதுபோல் உங்கள் பெற்றோரோ, சகோதரர்களோ, நண்பர்களோ, உறவினர்களோ சிந்திப்பது இல்லை. உலகத்தில் உள்ள ஒவ்வொரு மனிதரும் ஒவ்வொரு விதமாகவே சிந்திக்கிறார்கள்.

ஆனால்...........

சிந்தனையை அது சிந்திக்கப்படுகிற விதத்தினை அடிப்படையாக கொண்டு உலகிலுள்ள அனைவரையுமே இரண்டு விதமாக நோக்கலாம். தோல்விகளையும் ஏமாற்றங்களையும், இயலாமையும், எதிர்மறையான காரியங்களையும் அடிப்படையான சிந்தனையாக கொண்டு வாழ்க்கையில் நடந்து செல்கின்ற ஒரு வகையினர். அடைந்தே தீரவேண்டும் என்ற இலக்குடன், அடைய முடியும் என்ற நம்பிக்கையுடன் அடையவேண்டும் என்ற விடாமுயற்சியுடன் சிந்தித்து, வாழ்க்கை முன் ஓடிச் செல்கின்றவர்கள் இன்னொரு வகையினர்

யார் சாதிக்கிறார்கள்?

தன்னுடைய ஆய்வுகூடம் முற்றாய் தீக்கிரையான நிலையிலும் பழையன கழிதலும் புதியன புகுதலும் என்று புது அடி எடுத்து வைத்தவர் தோமஸ் அல்வா எடிசன். நிறுவனம் முற்று முழுதாக அழிந்து போன நிலையிலும் அலுக்காமல் சலிக்காமல் எழுந்து நின்றவர் ஹொன்டா நிறுவன அதிபர்.

இவர்கள் சாதித்தார்கள்.

உங்களாலும் முடியும். எந்த ஒரு காரியமாக இருந்தாலும் அடைந்தே தீரவேண்டும் என்ற இலக்குடன், அடைய முடியும் என்ற நம்பிக்கையுடன் அடையவேண்டும் என்ற விடாமுயற்சியுடன் சிந்தித்து செயற்பட்டால் நீங்களும் சாதனையாளராகலாம்.

Jesudas Chandrasegarar
Director



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடநெறியை ஆரம்பிப்பதற்கு முன் ..........

நாம் கடந்த 11 புத்தகங்களிலும் பார்த்ததான பல்வேறு விதமான வசனங்களில் இருந்து உருவாக்கக்கூடியதான வசனங்களையும் பயிற்சிகளையும் இந்த புத்தகத்தில் பார்க்கலாம். சில வசனங்களில் அடுத்துவரும் பாடங்களில் நாம் பார்க்கவுள்ளதான இரண்டு வசனங்களை இணைக்கின்ற அமைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளது. இவை விளங்கிக்கொள்ள முடியாவிட்டாலும் அடுத்த புத்தகங்களில் வரும்போது இலகுவாக இருக்கும். அடுத்து வரும் புத்தகங்களில் சில சிக்கலான வசன அமைப்புகளை பார்க்க உள்ளதால் இந்த நூல் வரைக்கும் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து பயிற்சிகளையும் செய்வது அடுத்துவரும் நூல்களை இலகுவாக பயில துணைபுரியும். அத்தோடு பரீட்சைக்கும் உங்களை தயார்படுத்த முடியும்.

## பாடநெறியும் பயிற்சிகளும்

கீழே கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு தொகுதியிலும் ஒரே விதமான மூன்று வசனங்களும் அவற்றிற்கான அர்த்தங்களும் கொடுக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து அதேவிதமான தமிழில் கொடுக்கப்பட்டுள்ள வசனத்தினை ஆங்கிலத்திலும் அவ்வாறு ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்டுள்ள வசனத்தை தமிழிலும் எழுதுக

❖ **What game** do they play? அவர்கள் **என்ன** விளையாட்டு விளையாடுகிறார்கள்?
**What food** will she cook? அவள் **என்ன** சாப்பாடு சமைப்பாள்?
**What time** did he come? அவன் **என்ன** நேரம் வந்தான்?

தமிழில் எழுதுக
**What date** will she come?
**What book** do they read?

ஆங்கிலத்தில் எழுதுக
நீங்கள் **என்ன** நிறம் விரும்புகிறீர்கள்?
அவர்கள் **என்ன** காய்கறி வாங்கினார்கள்?

❖ Have you got **enough money**? உன்னிடம் **போதுமான** பணம் இருக்கிறதா?
Has he got **enough food**? அவனிடம் **போதுமான** உணவு இருக்கிறதா?
Have they got **enough space**? அவர்களிடம் **போதுமான** இடம் இருக்கிறதா?

தமிழில் எழுதுக
Has she got **enough books**?
Have they got **enough time**?

ஆங்கிலத்தில் எழுதுக
உன்னிடம் **போதுமான** உடுப்புகள் இருக்கிறதா?
எங்களிடம் **போதுமான** பேனாக்கள் இருக்கிறதா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ Where **shall we** meet? நாங்கள் எங்கே சந்திப்பம?
What **shall we** do? நாங்கள் என்ன செய்வம்?
When **shall we** play? நாங்கள் எப்போது விளையாடுவம்?

தமிழில் எழுதுக
What **shall we** read?
Where **shall we** go?

ஆங்கிலத்தில் எழுதுக
நாங்கள் எங்கே படிப்பம்?
நாங்கள் என்ன சாப்பிடுவம்?

❖ I **know exactly** what they said எனக்கு சரியாக தெரியும் அவர்கள் என்ன சொன்னார்கள் என்று
He **knew exactly** where I went அவனுக்கு சரியாக தெரியும் நான் எங்கே போனேன் என்று
She **will know exactly** how he does அவளுக்கு சரியாக தெரியும் அவன் எப்படி செய்கிறான் என்று

தமிழில் எழுதுக
You **know exactly** where she buys
I **know exactly** how they came

ஆங்கிலத்தில் எழுதுக
எங்களுக்கு சரியாக தெரியும் அவர்கள் எப்படி போனார்கள் என்று
அவனுக்கு சரியாக தெரியும் நீ எப்போது வந்தாய் என்று

❖ **I suppose** I will have to cook நான் நினைக்கிறேன் நான் சமைக்கவேண்டியிருக்கும்
**I suppose** he is coming நான் நினைக்கிறேன் அவன் வந்துகொண்டிருக்கிறான்
**I suppose** they will be there நான் நினைக்கிறேன் அவர்கள் அங்கே இருப்பார்கள்

தமிழில் எழுதுக
**I suppose** they will play
**I suppose** he will come there

ஆங்கிலத்தில் எழுதுக
நான் நினைக்கிறேன் நீ வருவாய்
நான் நினைக்கிறேன் அவர்கள் படித்துக்கொண்டிருக்கிறார்கள்

❖ You can keep that **if you like** நீங்கள் விரும்பினால் அதனை வைத்திருக்க முடியும்
She may take that **if she wants** அவள் தேவைப்பட்டால் அதனை எடுக்கலாம்
They must tell that **if they know** அவர்கள் தெரிந்தால் அதனை சொல்ல வேண்டும்

தமிழில் எழுதுக
We can go there **if we like**
I will give that **if you want**

ஆங்கிலத்தில் எழுதுக
அவர்கள் விரும்பினால் இங்கே வரலாம்
நீங்கள் வந்தால் நான் தருவேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **Don't go** near the water — தண்ணிக்கு பக்கத்தில் போக வேண்டாம்
**Don't eat** that food — அந்த உணவை உண்ண வேண்டாம்
**Don't touch** the fire — நெருப்பை தொட வேண்டாம்

தமிழில் எழுதுக
**Don't jump** over the wall
**Don't cross** the road

ஆங்கிலத்தில் எழுதுக
அவனோடு கதைக்க வேண்டாம்
அந்த பெட்டியை எடுக்க வேண்டாம்

❖ **I can't** open this box — என்னால் இந்த பெட்டியை திறக்க முடியாது.
**They can't** do this work — அவர்களால் இந்த வேலையை செய்ய முடியாது
**We can't** go there — எங்களால் அங்கே போக முடியாது

தமிழில் எழுதுக
**She can't** type fast
**You can't** cook well

ஆங்கிலத்தில் எழுதுக
அவனால் கார் ஓட முடியாது
என்னால் வேகமாக ஓட முடியாது

❖ **What sort of food** has she cooked? என்னவிதமான சாப்பாடு அவள் சமைத்திருக்கிறாள்
**What sort of courses** can you do? என்னவிதமான பாடநெறிகள் நீ செய்ய முடியும்?
**What sort of games** shall we play? என்னவிதமான விளையாட்டுகள் நாம் விளையாடுவம்?

தமிழில் எழுதுக
**What sort of works** do they have?
**What sort of places** will they go?

ஆங்கிலத்தில் எழுதுக
என்னவிதமான சாப்பாடுகள் ந விரும்புகிறாய்?
என்னவிதமான புத்தகங்கள் ந வைத்திருக்கிறாய?

❖ **Why don't you go** by train? நீ ஏன் புகையிரதத்தில் போகிறதில்லை?
**Why can't they come** here? அவர்கள் ஏன் இங்கு வர முடியாது?
**Why shouldn't she work?** அவள் ஏன் வேலைசெய்ய கூடாது?

தமிழில் எழுதுக
**Why doesn't she cook** well?
**Why did't they play** well?

ஆங்கிலத்தில் எழுதுக
நீ ஏன் பாடசாலைக்கு போவதில்லை?
அவர்கள் ஏன் அங்கு போக கூடாது?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **What about** having a party? ஒரு விருந்து எடுப்பது **என்னமாதிரி**? (கருத்து கேட்டல்)
  **What about** going there? அங்கே போவது **என்னமாதிரி**? (கருத்து கேட்டல்)
  **What about** this saaree? இந்த சேலை **என்னமாதிரி**? (கருத்து கேட்டல்)

  தமிழில் எழுதுக
  **What about** playing on Saturday?
  **What about** that course?

  ஆங்கிலத்தில் எழுதுக
  அவனுடைய உடல்நிலை **என்னமாதிர**ி? (கருத்து கேட்டல்)
  அவர்களுடைய படிப்புகள் **என்னமாதிர**ி? (கருத்து கேட்டல்)

- **The trouble is that** noone knows this **பிரச்சினை என்னன்றால்** யாருக்கும் இது தெரியாது
  **The trouble is that** he will not come **பிரச்சினை என்னன்றால்** அவன் வரமாட்டான்
  **The trouble is that** I can't do it **பிரச்சினை என்னன்றால்** நான் அதை செய்ய முடியாது

  தமிழில் எழுதுக
  **The trouble is that** she may not be there
  **The trouble is that** none of us eats jam

  ஆங்கிலத்தில் எழுதுக
  **பிரச்சினை என்னவென்றால்** அவன் இதை ஏற்றுக்கொள்ள மாட்டான்
  **பிரச்சினை என்னவென்றால்** நாங்கள் அங்கே போக முடியாது

- **Have you seen** the library? நீ அந்த நூலகத்தை **பார்த்து இருக்கிறாயா?**
  **Has he seen** you? அவன் உன்னை **பார்த்து இருக்கிறானா?**
  **Have thay send** the letter? அவர்கள் கடிதத்தை **அனுப்பி இருக்கிறார்களா?**

  தமிழில் எழுதுக
  **Has she come** there?
  **Have you informed** them?

  ஆங்கிலத்தில் எழுதுக
  நீங்கள் பத்திரிகை **வாசித்து இருக்கிறீர்களா?**
  அவள் கடைக்கு **போய் இருக்கிறாளா?**

- **Do whatever** you like நீ விரும்புகிறது **எதுவென்றாலும் செய்**
  **Go wherever** they like அவர்கள் விரும்புகிறது **எங்கேயென்றாலும் போ**
  **Do whenever** she asks அவள் கேட்கிறது **எப்போதென்றாலும் செய்**

  தமிழில் எழுதுக
  **Come whenever** I ask
  **Give whatever** you have

  ஆங்கிலத்தில் எழுதுக
  நீ விரும்புகிறது **எதுவென்றாலும் படி**
  நாங்கள் கேட்கிறது **எங்கேயென்றாலும் போ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **Don't argue** with your father உன்னுடைய தகப்பனுடன் வாதம் செய்யாதே
**Don't agree** with your friends உன்னுடைய நண்பர்களுடன் உடன்படாதே
**Don't play** in the morning காலையில் விளையாடாதே

தமிழில் எழுதுக
**Don't disturb** others
**Don't go** there

ஆங்கிலத்தில் எழுதுக
கண்ணாடியை உடைக்காதே
இங்கே நித்திரை செய்யாதே

❖ **Will you be** here tomorrow? நீ நாளைக்கு இங்கே இருப்பாயா?
**Will they come** to school? அவர்கள் பாடசாலைக்கு வருவார்களா?
**Will he bring** that book? அவன் அந்த புத்தகத்தை கொண்டுவருவானா?

தமிழில் எழுதுக
**Will she cook** there tomorrow?
**Will you see** me tomorrow?

ஆங்கிலத்தில் எழுதுக
அவர்கள் வேலைக்கு போவார்களா?
நீங்கள் விருந்துக்கு வருவீர்களா?

❖ **Why don't you trust** him? நீ ஏன் அவனை நம்புகிறாய் இல்லை
**Why can't they go** there? அவர்கள் ஏன் அங்கே போக முடியாது
**Why shouldn't you tell** that? நீ ஏன் அதை சொல்லக்கூடாது

தமிழில் எழுதுக
**Why can't they study** well?
**Why don't you give** them?

ஆங்கிலத்தில் எழுதுக
அவன் ஏன் அதை எழுதக்கூடாது?
அவர்கள் ஏன் அங்கே போகிறார்கள் இல்லை?

❖ **Have you reserved** a seat? நீ ஒரு ஆசனம் பதிவுசெய்திருக்கிறாயா?
**Has he brought** a letter? அவன் ஒரு கடிதம் கொண்டுவந்திருக்கிறானா?
**Have they sent** him a reply? அவர்கள் அவனுக்கு ஒரு பதில் அனுப்பியிருக்கிறார்களா?

தமிழில் எழுதுக
**Have you given** him that?
**Has she passed** the examination?

ஆங்கிலத்தில் எழுதுக
அவர்கள் விருந்துக்கு போய் இருக்கிறார்களா?
நீங்கள் இங்கே முன்பு வந்திருக்கிறீர்களா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **How long have you been** here? எவ்வளவு காலம் நீங்கள் இங்கே இருந்து இருக்கிறீர்கள்?
**How long has he been** there? எவ்வளவு காலம் அவன் அங்கே இருந்து இருக்கிறான்?
**How long have you studied** ? எவ்வளவு காலம் நீங்கள் படித்து இருக்கிறீர்கள்?

தமிழில் எழுதுக
**How long has he played** for his team?
**How long have they stayed** here?

ஆங்கிலத்தில் எழுதுக
எவ்வளவு காலம் அவர்கள் அங்கே வசித்து இருக்கிறார்கள்?
எவ்வளவு காலம் அவள் அங்கே படிப்பித்து இருக்கிறாள்?

❖ **Shall we ever meet** again? நாங்கள் எப்போதாவது திரும்ப சந்திப்பமா?
**Shall I ever go** there? நான் எப்போதாவது அங்கே போவனா?
**Shall we ever go** abroad? நாங்கள் எப்போதாவது வெளிநாடு போவமா?

தமிழில் எழுதுக
**Shall we ever study** together?
**Shall I ever see** him?

ஆங்கிலத்தில் எழுதுக
நாங்கள் எப்போதாவது அவரை நேரடியாக சந்திக்கலாமா?
நான் எப்போதாவது திரைப்படத்துக்கு போவனா?

❖ **What are you going to study**? நீங்கள் என்ன படிக்க போகிறீர்கள்?
**When are we going to start**? நாங்கள் எப்போது தொடங்க போகிறோம்?
**How are you going to meet** him? நீங்கள் எப்படி அவனை சந்திக்க போகிறீர்கள்?

தமிழில் எழுதுக
**What are you going to tell** him?
**How are they going to explain** that?

ஆங்கிலத்தில் எழுதுக
நான் எப்படி வீட்டுவேலையை முடிக்க போகிறேன்?
அவர்கள் எப்படி உதவி செய்ய போகிறார்கள்?

❖ **What else** did you see? வேறு என்ன நீ பார்த்தாய்?
**What else** do you want? வேறு என்ன உனக்கு வேண்டும்?
**Where else** will they go? வேறு எங்கே அவர்கள் போவார்கள்?

தமிழில் எழுதுக
**Who else** will come there?
**What else** can I expect from them?

ஆங்கிலத்தில் எழுதுக
வேறு எங்கே நாங்கள் போக வேண்டும்?
வேறு என்ன அவர்கள் செய்ய கூடும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ Where am I **supposed to go**? நான் எங்கே போக வேண்டியதாய் இருக்கிறது?
What am I **supposed to do**? நான் என்ன செய்ய வேண்டியதாய் இருக்கிறது?
What are they **supposed to bring**? அவர்கள் என்ன கொண்டுவர வேண்டியதாய இருக்கிறது?

தமிழில் எழுதுக
How are we **suppose to make** that?
When is he **supposed to come** back?

ஆங்கிலத்தில் எழுதுக
நான் என்ன சொல்ல வேண்டியதாய் இருக்கிறது?
அவள் எப்படி போக வேண்டியதாய் இருக்கிறது?

❖ I'll wait for you **if you like** நீ விரும்பினால் நான் உனக்காக காத்திருப்பேன்
They will come **if you ask** நீங்கள் கேட்டால் அவர்கள் வருவார்கள்
She will tell that **if she knows** அவள் தெரிந்தால் அதை சொல்லுவாள்

தமிழில் எழுதுக
I'll go there **if I can**
She will help you **if you ask her**

ஆங்கிலத்தில் எழுதுக
அவன் வைத்திருந்தால் உனக்கு தருவான்
நீங்கள் காத்திருந்தால் அவர்களை சந்திப்பீர்கள்

❖ **Would you like** to come? நீங்கள் வர விரும்புகிறீர்களா?
**Would you like** to tell that? நீங்கள் அதை சொல்ல விரும்புகிறீர்களா?
**Would you like** to give me? நீங்கள் எனக்கு தர விரும்புகிறீர்களா?

தமிழில் எழுதுக
**Would you like** to stay here?
**Would you like** to have a tea?

ஆங்கிலத்தில் எழுதுக
நீங்கள் வீட்டுக்கு போக விரும்புகிறீர்களா?
நீங்கள் இன்னொரு பழம் விரும்புகிறீர்களா?

❖ I don't know **what to do** என்ன செய்வதென்று எனக்கு தெரியவில்லை
I don't know **where to go** எங்கே போவதென்று எனக்கு தெரியவில்லை
He doesn't know **how to talk** எப்படி கதைப்பதென்று அவனுக்கு தெரியவில்லை

தமிழில் எழுதுக
She doesn't know **where to go**
I don't know **how to escape** from him

ஆங்கிலத்தில் எழுதுக
எப்படி நீந்துவதென்று அவளுக்கு தெரியவில்லை
எங்கே போவதென்று அவர்களுக்கு தெரியவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **Would you mind moving** a bit? கொஞ்சம் நகரமுடியுமா? (பணிவாக)
**Would you mind giving** me a pencil? எனக்கு ஒரு பென்சில் **தரமுடியுமா?**
**Would you mind going** slowly? மெதுவாக **போகமுடியுமா?** (பணிவாக)

தமிழில் எழுதுக
**Would you mind giving** me a call?
**Would you mind walking** slowly?

ஆங்கிலத்தில் எழுதுக
தமிழ் அர்த்தத்தை **சொல்ல முடியுமா?** (பணிவாக)
கொஞ்சம் கடன் தர **முடியுமா?** (பணிவாக)

❖ Keep it **till you see me again** **நீ என்னை திரும்ப பார்க்கும் வரை அதை வைத்திரு**
Do that **till I tell you** **நான் சொல்லும்வரை** அதை செய்
Go there **till you see a junction** **ஒரு சந்தியை பார்க்கும்வரை அங்கே போ**

தமிழில் எழுதுக
Stand there **till I call you**
Call him **till he turns back**

ஆங்கிலத்தில் எழுதுக
**நீ** சித்தியடையும்வரை படி
**நீ** வெற்றியடையும்வரை முயற்சிசெய்

❖ What is your new house **like?** உன்னுடைய புதிய வீடு **என்னமாதிரி?** (தோற்றம்)
What is his office **like?** அவனுடைய அலுவலகம் **என்னமாதிரி?** (தோற்றம்)
What is the earth **like?** உலகம் **என்னமாதிரி?** (தோற்றம்) (It is like an orange)

தமிழில் எழுதுக
What is a tiger **like?**
What is a CD **like?**

ஆங்கிலத்தில் எழுதுக
தாஜமகால் **என்னமாதிரி?** (தோற்றம்)
அவனுடைய அப்பா **என்னமாதிரி?** (தோற்றம்)

❖ Make a list **of what you want** உனக்கு தேவையானவற்றின் பட்டியலை செய்
Give him the price **of what he asked** **அவன் கேட்டதன்** விலையை அவனுக்கு கொடு
Prepare the summery **of what they taught** **அவர்கள் கற்பித்ததன்** சாராம்சத்தை தயார்செய்

தமிழில் எழுதுக
Draw the picture **of what you saw**
Tell him the details **of what he brought**

ஆங்கிலத்தில் எழுதுக
**எங்களுக்கு தேவையானவற்றின்** பட்டியலை அவனிடம் குடு
**அவர்களுக்கு வேவையானவற்றின்** விபரத்தை கேள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **Don't forget** to send a letter ஒரு கடிதம் அனுப்ப மறக்காதே
  **Don't forget** to to give him the money அவனுக்கு பணத்தை கொடுக்க மறக்காதே
  **Don't forget** to ask their address அவர்களுடைய முகவரியை கேட்க மறக்காதே

  தமிழில் எழுதுக
  **Don't forget** to pass him the message
  **Don't forget** to get me some fruits

  ஆங்கிலத்தில் எழுதுக
  அவர்களிடமிருந்து புத்தகத்தை வாங்க மறக்காதே
  கடையில் பொருள்களை வாங்க மறக்காதே

- Ask **what he thinks of this**? அவன் இதைப்பற்றி என்ன நினைக்கிறான் என்று கேள்
  Tell **what you think of him**? நீ அவனைப்பற்றி என்ன நினைக்கிறாய் என்று சொல்
  Tell **what he thinks of me**? அவன் என்னைப்பற்றி என்ன நினைக்கிறான் என்று சொல்

  தமிழில் எழுதுக
  Ask them **what they think of the idea**?
  Tell them **what you think of their project**?

  ஆங்கிலத்தில் எழுதுக
  அவர்கள் உன்னைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று கேள்
  நீ அவர்களுடைய திட்டத்தைப்பற்றி என்ன நினைக்கிறாய் என்று விவரி

- I have **something to tell you** நான் உங்களுக்கு சொல்ல சில காரியங்கள் இருக்கிறது
  He has **something to forgive** அவன் மன்னிப்பதற்கு சில விசயங்கள் இருக்கிறது
  We have **something to show** you நாங்கள் உங்களுக்கு காட்டுவதற்கு சில இருக்கின்றன

  தமிழில் எழுதுக
  They have **something to leave** here.
  I have **something to post** you

  ஆங்கிலத்தில் எழுதுக
  நான் அவர்களுக்கு சொல்வதற்கு சில விடயம் இருக்கிறது
  அவர்கள் எங்களுக்கு தருவதற்காக சில காரியம் இருக்கிறது

- **Shall I lend** you some money? நான் உங்களுக்கு கொஞ்சம் பணம் இரவல் தரவா?
  **Shall I give** you a book? நான் உங்களுக்கு ஒரு புத்தகம் தரவா?
  **Shall we go** to the library? நாங்கள் நூல் நிலையத்துக்கு போவமா?

  தமிழில் எழுதுக
  **Shall I take** you to the hospital?
  **Shall I explain** you this chapter?

  ஆங்கிலத்தில் எழுதுக
  நான் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதவா?
  நாங்கள் இங்கிருந்து புறப்படுவமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **I hope** you'll have a good journey உங்களுக்கு நல்ல பயணம் இருக்குமென்று நான் எதிர்பார்க்கிறேன்
**I hope** you'll send the reply நீங்கள் பதில் அனுப்புவீர்களென்று நான் எதிர்பார்க்கிறேன்
**We hope** you won't forget us நீங்கள் எங்களை மறக்க மாட்டீர்களென்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்

தமிழில் எழுதுக
**I hope** you will find a good place to stay there
**We hope** you'll have a good journey

ஆங்கிலத்தில் எழுதுக
நீங்கள் இந்த பரீட்சையில் சித்தியடைவீர்களென்று நான் எதிர்பார்க்கிறேன்
நீங்கள் உங்கள் மோதிரத்தை கண்டுபிடிப்பீர்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்

❖ I'll wait for you, **I promise** நான் உனக்காக காத்திருப்பேன், நான் சத்தியம் செய்கிறேன்
I will not forget you, **I promise** நான் உன்னை மறக்கமாட்டேன். நான் சத்தியம் செய்கிறேன்.
I'll send a letter, **I promise** நான் கடிதம் அனுப்புவேன், நான் சத்தியம் செய்கிறேன்

தமிழில் எழுதுக
I'll tell him the message, **I promise**
I'll send you all the details, **I promise**

ஆங்கிலத்தில் எழுதுக
நான் அவனோடு கதைக்கமாட்டேன், நான் சத்தியம் செய்கிறேன்
நான் பாடசாலைக்கு போவேன், நான் சத்தியம் செய்கிறேன்

❖ Shall I tell him **what happened**? என்ன நடந்ததென்று நான் அவனுக்கு சொல்லட்டா?
Does he know **what happened**? என்ன நடந்ததென்று அவனுக்கு தெரியுமா?
Shall I ask **who passed**? யார் சித்தியடைந்ததென்று நான் கேட்கட்டா?

தமிழில் எழுதுக
May I know **who did it**?
Shall I tell you **what fell down**?

ஆங்கிலத்தில் எழுதுக
யார் வென்றார்களென்று உனக்கு தெரியுமா?
அவனுக்கு என்ன நடந்ததென்று யாருக்கும் தெரியாது.

❖ Write to me **as often as you can** உன்னால் முடியுமான அடிக்கடி எனக்கு எழுது
Come there **as soon as you can** உன்னால் முடியுமான விரைவாக அங்கே வா
Inform me **as early as possible** சாத்தியமானவரை முன்னதாக எனக்கு தெரிவி

தமிழில் எழுதுக
Give the book **as soon as possible**
Send me the parcel **as early as possible**

ஆங்கிலத்தில் எழுதுக
உன்னால் முடியுமானவரை வேகமாக நட
உங்களால் முடியுமானவரை கடினமாக முயற்சியுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ Why does the price go up **so often**? ஏன் விலை அவ்வளவு அடிக்கடி கூடுகிறது
Why does he come **so often**? ஏன் அவன் அவ்வளவு அடிக்கடி வருகிறான்
Why do they walk **so fast**? ஏன் அவர்கள் அவ்வளவு வேகமாக நடக்கிறார்கள்

தமிழில் எழுதுக
Why did he get up **so early**?
Why do they behave **so badly**?

ஆங்கிலத்தில் எழுதுக
ஏன் நீங்கள் அவ்வளவு மெதுவாக வேலைசெய்கிறீர்கள்
ஏன் அவர்கள் அவ்வளவு சத்தமாக கதைக்கிறார்கள்

❖ Do you see **what I have** நான் வைத்திருப்பது என்னவென்று நீ பார்க்கிறாயா?
Do you understand **what I tell you** நான் சொல்வது என்னவென்று உனக்கு புரிகிறதா?
Does he know **where I go** நான் போவது எங்கேயென்று அவனுக்கு தெரியுமா?

தமிழில் எழுதுக
Do you know **how I did it**
Does he understand **what you teach him**

ஆங்கிலத்தில் எழுதுக
நீங்கள் போனது எங்கேயென்று அவனுக்கு தெரியுமா?
அவர்கள் வருவது எப்போதென்று எனக்கு தெரியாது

❖ Don't believe **everything you hear** நீங்கள் கேட்பது எல்லாவற்றையும் நம்ப வேண்டாம்
Don't tell **everything you see** நீங்கள் பார்ப்பது எல்லாவற்றையும் சொல்ல வேண்டாம்
Don't go **everywhere you know** நீங்கள் தெரிந்த எல்லாஇடமும் போக வேண்டாம்

தமிழில் எழுதுக
Don't speak to **everyone you know**
Don't write **everything you read**

ஆங்கிலத்தில் எழுதுக
அவர்கள் கேட்பது எல்லாவற்றையும் கொடுக்க வேண்டாம்
வாங்கிய எல்லாவற்றையும் திருப்பி கொடு

❖ **Don't wait** till tomorrow நாளைவரை காத்திருக்க வேண்டாம்
**Don't wait** for others மற்றவர்களுக்காக காத்திருக்க வேண்டாம்
**Don't sleep** till 9 o' clock 9 மணிவரை நித்திரைகொள்ள வேண்டாம்

தமிழில் எழுதுக
**Don't go** by bus
**Don't shout** on others

ஆங்கிலத்தில் எழுதுக
மற்றவர்களுக்கு இடையூறு செய்யாதே
சத்தமாக கதைக்காதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **Could I have** two days leave? நான் இரண்டு நாள் லீவு எடுக்கலாமா? (பெரியவர்களிடம்)
**Could you give** me a pen? எனக்கு ஒரு பேனா தர முடியுமா? (பெரியவர்களிடம்)
**Could I take** that paper? நான் அந்த பத்திரிகையை எடுக்கலாமா (பெரியவர்களிடம்)

தமிழில் எழுதுக
**Could I use** your telephone? (பெரியவர்களிடம்)
**Could I go** now? (பெரியவர்களிடம்) (May I go now என்பதற்கு பதிலாக)

ஆங்கிலத்தில் எழுதுக
நான் நாளைக்கு வரலாமா (பெரியவர்களிடம்)
எனக்கு இதை விளக்க முடியுமா? (பெரியவர்களிடம்)

❖ Write a note **and** send me ஒரு குறிப்பெழுதி எனக்கு அனுப்பவும்
Come there **and** ask me அங்கு வந்து என்னை கேட்கவும்
Go now **and** come later இப்போது போய் பின்னர் வரவும்

தமிழில் எழுதுக
Stay here **and** go tomorrow
Have some food here **and** leave in the evening

ஆங்கிலத்தில் எழுதுக
அங்கு போய் கடிதம் போடவும்
வீட்டுக்கு வந்து இரவுணவு எடுக்கவும்

❖ **What shall I do** with this? **நான் இதனுடன் என்ன செய்வன்?**
**Where shall I go** now? **நான் இப்பொழுது எங்கே போவன்?**
**How shall we answer** for this? **நாங்கள் இதற்காக எப்படி பதிலளிப்பம்?**

தமிழில் எழுதுக
**What shall I do** for him ?
**When shall we go** there?

ஆங்கிலத்தில் எழுதுக
**நாங்கள் பரீட்சை எப்படி எழுதுவம்?**
**நான் விபரங்களை எங்கே கேட்பன்?**

❖ **Would you like** to join us? நீங்கள் எங்களோடு சேர விரும்புகிறீர்களா?
**Would you like** to come home? நீங்கள் வீட்டுக்கு வர விரும்புகிறீர்களா?
**Would you like** to play now? நீங்கள் இப்போது விளையாட விரும்புகிறீர்களா?

தமிழில் எழுதுக
**Would you like** to go to cinema?
**Would you like** to study there?

ஆங்கிலத்தில் எழுதுக
நீங்கள் ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?
நீங்கள் எங்களிடமிருந்து கடிதம் பெற விரும்புகிறீர்களா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ Please do **as I say** தயவுசெய்து நான் சொல்கிறபடி செய்
Please answer **as they teach you** தயவுசெய்து அவர்கள் கற்பித்தபடி பதிலளி
Please do **as he wrote to you** தயவுசெய்து அவன் எழுதியபடி செய்

தமிழில் எழுதுக
Please write **as you think**
Please do **as it is written**

ஆங்கிலத்தில் எழுதுக
தயவுசெய்து நீ படித்ததன்படியே எழுது
தயவுசெய்து அதில் எழுதியிருக்கிறபடியே வாசி

❖ **Remember** to write to your mother உன் தாய்க்கு கடிதம் எழுத ஞாபகமாயிரு
**Remember** to do your homeworks உன் வீட்டுவேலையை செய்ய ஞாபகமாயிரு
**Remember** to tell him the news அவனுக்கு செய்தியை சொல்ல ஞாபகமாயிரு

தமிழில் எழுதுக
**Remember** to inform me earlier .
**Remember** to tell that to all your friends

ஆங்கிலத்தில் எழுதுக
சீக்கிரமாக வருவதற்கு ஞாபகமாயிரு (= மறக்காதே)
அங்கிருந்து கடிதம் போடுவதற்கு ஞாபகமாயிரு (= மறக்காதே)

❖ Read it **before you sign it** ஒப்பமிடுவதற்கு முன் அதை வாசி
Finish it **before they ask** அவர்கள் கேட்பதற்கு முன் முடித்துவிடு
Think **before you speak** கதைப்பதற்கு முன் யோசி

தமிழில் எழுதுக
Know them **before you speak to them**
brush your teeth **before you go to bed**

ஆங்கிலத்தில் எழுதுக
பரீட்சைக்கு போவதற்கு முன் ஓய்வெடு
சாப்பிடுவதற்கு முன் கைகழுவு

❖ **Do you think** it smells bad? நீ நினைக்கிறாயா அது கூடாததாக மணக்கிறதென்று?
**Do you think** he studies well? நீ நினைக்கிறாயா அவன் நன்றாக படிக்கிறானென்று?
**Does he think** he does good? அவன் நினைக்கிறானா அவன் நல்லது செய்கிறானென்று?

தமிழில் எழுதுக
**Does she think** he goes to school?
**Do you think** he works hard?

ஆங்கிலத்தில் எழுதுக
நீ நினைக்கிறாயா அவர்கள் இங்கே வருகிறார்கள் என்று?
அவன் நினைக்கிறானா அவர்கள் விளையாடுகிறார்களென்று?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சி 2

கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆங்கில வசனங்கள் ஒவ்வொன்றுக்கும் அவற்றின் தமிழ் வசனங்களை எழுதி அவை ஒவ்வொன்றுக்கும் கீழே நாம் இதுவரை பார்த்ததை போன்று அவற்றை ஒத்த மூன்று ஆங்கில வசனங்களையும் அவற்றிற்கான தமிழ் அர்த்தத்தினையும் எழுதுக.

I've been in London for a month
Is there a school nearby?
Shall I do it for you?
We can ask Raja to do the homework.
Would you like to see that house?
Whose car did you borrow last night?
Why do you think it may be dangerous?
He asked his father for money.
Would you like to speak to him?
Will he have to pay tax on it?
Can I have a holiday on Monday?
Everyone else had gone to the park.
He hasn't even got a desk to write at
Mr Ramu is very keen on punctuality.
I want to go to my grandson's wedding.
I think I left my umbrella in the bus.
Would you like to come with us?
I've lived in this street for ten years.
He depends on his father for everything.
Can I look up a word in your dictionary?
He always sends me books for my birthday.
The library is open from 10 to 4 o'clock.
So now he's been at school for ten years.
I want to post this letter to a friend in Italy.
Don't leave your luggage in the corridor.
I believe one of them is still in hospital.
He told them to wait for him at the bridge.
He goes to his office every day except Sunday.
The house is on fire!
Are you coming back to Colombo after the holidays?
I hope you don't mind sitting in the gallery.
They don't allow you to smoke in cinemas in France.
She's been supporting the family for the last year.
I'm interested in chess but I'm not very good at it.
On Sundays he stays at home and works in the garden.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

by mistake I opened Mary's letter instead of my own.
He sold the picture to an Indian dealer for Rs.5,000.
I'm not going for a walk; I'm only going to the bank.
Write in ink and put your name at the top of the page.
There is a parcel of books for you on the table in the hall.
He sometimes plays for us
It never occurred to me to ask him for proof of his nationality
What about taking the day off and spending it at the park
You look worried Are you in some sort of trouble?
I'm sorry for being late on Monday.
You can't rely on him.
He's almost always late for work.
He's thinking of going back to London
Who is the girl in the blue dress
How do I get to the air terminal?
I was horrified at his appearance.
He looked as if he is very old.
Are you on your own (alone)?
How do I get to the Public Library

இதுவரையும் 24 புத்தகங்கள் கொண்ட இந்த பாடநெறியின் 12 புத்தகங்களை பார்த்துள்ளீர்கள். இவை இலகுவான ஆங்கில வசன அமைப்புகளாக இருந்தாலும் ஆங்கிலத்தில் இருக்கக்கூடியதான ஏராளமான வசன அமைப்புகளை இதில் அடக்கியுள்ளோம். அடுத்த 12 புத்தகங்களிலும் இவ்வாறான வசனங்களை சேர்த்தல், மற்றும் இந்தவகையான வசனங்களை கொண்டு கடிதம் எழுதுதல், நூல் மொழிமாற்றம் செய்தல், தகவல் தொழில் நுட்ப கல்வி போன்றவற்றினை பார்க்க உள்ளோம். வழக்கமான பிரயோகங்களின் அடிப்படையிலான இம்முறையானது சமூகத்தில் ஆங்கிலத்தின் பயன்பாட்டினை அடிப்படையாக கொண்டு இருக்கும்.

மிகுதியான பாடநெறிகளை இலகுவாக மேற்கொள்வதற்கு இதுவரை பெற்றுக்கொண்ட புத்தகங்களில் உள்ளதான அனைத்து பயிற்சிகளையும் செய்யவேண்டியது அவசியமாகும். பாடங்களை தொடர்ந்து படிப்பதை விட்டு அவற்றில் உள்ள ஒவ்வொரு பயிற்சிகளையும் செய்வதனாலேயே இதன் முழுமையான பலனை பெற்றுக்கொள்ள முடியும்.

தனிநபர் மற்றும் சமுதாய ரீதியான முன்னேற்றத்தினை அடிப்படையாக கொண்ட எமது பாடநெறிகளில் நீங்கள் பெற்றுக்கொள்ளும் பாண்டித்தியமானது உங்களுக்கு மாத்திரமன்றி சமுதாயத்துக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்பதே எமது எண்ணம்.

J. Chandrasegarar
*Director*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Psalm Institute of Engineering and Technology**
A Division of Psalms Technologies (Pvt) Ltd,
22-1/4, Galle Road, Dehiwala.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org